முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) இரண்டாம் தவணைப்பரீட்சை 2017 யூலை
**General Certificate of Education (Ord. Level)Second Term Examination, 2017July**

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II<br>**Communication and MediaStudies I,II** | **87 \| T \| I,II** | மூன்று மணித்தியாலம்<br>**Three Hours** |

**அறிவுறுத்தல்:**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக
4. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1) ஹரோல் டி லாஸ்வெல்லின் மாதிரி
   A – செயல் விளைவு பற்றி முக்கிய கவனம் செலுத்துகின்றது
   B – தாக்கம் பற்றி வலியுறுத்துகின்றது
   C – நேர்வழி தொடர்பு செயன்முறையைக் கொண்டது
   D – பெறுநரிடம் குறைந்த கவனம் செலுத்துகின்றது
   இவற்றில் சரியானவை
   i. A, B   ii. A,D
   iii. A, B,C   iv. A, B,C,D

2) வெகுசனத்தொடர்பாடலின் இயல்பிற்கு பொருத்தமானது
   i. இருவழித்தொடர்பாடல்   ii. பகிரங்கமான தகவல் வெளிப்படுத்துகை
   iii. பின்னூட்டல் உடனடியானது   iv. சுயதணிக்கை காணப்படக்கூடாது

3) பலகை அச்சு வழியில், அச்சுப்பதித்தல் முறையில் உருவான முதல் புத்தகங்கள் முறையே குறிப்பது
   i. வஜ்ரசூத்திரம், இலத்தீன் இலக்கணம்   ii. இலத்தீன் இலக்கணம், வஜ்ரசூத்திரம்
   iii. பைபிள்.இலத்தீன் இலக்கணம்   iv. இலத்தீன் இலக்கணம், பைபிள்

4) டப்லொயிட் (Tabloid) பத்திரிகைகளின் பண்புகளிற்கு பொருத்தமானவை
   A – ஒப்பீட்டளவில் சிறியது
   B – வலுவான வெகுசன ஊடகம்
   C – வித்தியாசமான வடிவமைப்பு கொண்டது
   D – தினகரன்,தரணி,மிகிரி அனைத்தும் டப்லொயிட் பத்திரிகைகளிற்கு உதாரணங்கள் ஆகும்
   i. A,C   ii. A,D
   iii. A,C,D   iv. A,B,C,D

5) "பெற்றோலின் விலை திடீரென உயர்வு" தொடர்பான தகவல் செய்தியாக மாற்றம் பெறுவதில் உள்ளடங்கும் காரணி
   i. அண்மித்த தன்மை   ii. அசாதாரண தன்மை
   iii. தாக்கமும் முக்கியத்துவமும்   iv. வெளிப்படையாக தெரிதல்

6) பொதுமக்கள் விரும்பி பார்க்கும் செய்தி, விளம்பரம், கருத்துக்கள் வேறு விடயங்களினை உள்ளடக்கி தினசரி, வாராந்தம் வெளியாகும் அச்சூடகமே பத்திரிகை என வரைவிலக்கணப்படுத்தியது
   i. யுனெஸ்கோ   ii. ஐரோப்பிய ஆணைக்குழு
   iii. இலங்கை பத்திரிகை சபை   iv. ஒக்ஸ்போட் அகராதி

7) வகுப்பறை ஒன்றில் மாணவர் குழுவானது பத்திரிகை உருவாவதற்கான அடிப்படைகள் தொடர்பில் கலந்துரையாடினார்கள். அவை பின்வருமாறு
கரண் - தகவல்களை ஒன்று சேர்த்தல்
விமல் - கணணியில் எழுத்தின் அளவு, வகை தெரிவு
அருண் - அதிகாரம் பெற்றவரிடம் அனுமதி பெறல்
இவற்றில் சரியானவற்றை முன்வைத்தவர்கள்

i. கரண்
ii. கரண், விமல்
iii. கரண், அருண்
iv. கரண், விமல், அருண்

8) இலங்கை வானொலியில் தனியார் ஒலிபரப்பு சேவை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட ஆண்டு

i. *1990*
ii. *1983*
iii. *1993*
iv. *1994*

9) நாணயக் கணக்கீட்டு இயந்திரத்தின் பண்பாக கொள்ள முடியாதது

i. போலி நாணயத்தாள்களை வேறுபடுத்தி அறிய முடியும்
ii. நாணயத்தாள்களின் பெறுமதியையே கணக்கெடுக்கின்றது
iii. பொதுவாக ஒரு முறையில் ஒரே வகையான நாணயத்தாள்களே இடப்படுகின்றன
iv. நாணயத்தாள்களை எண்ணுவதற்கான நேரத்தை மீதப்படுத்துகின்றன.

10) எறிவை ஊடக உபகரணங்களில் ஊடாடுகைப் பலகை தொடர்பான கூற்றுக்கள் வருமாறு
A – கரும்பலகையை விடப்பெரிய உட்பகுதியைக் கொண்ட வெண்ணிறத்தன்மையுடன் கூடிய பலகை ஒன்றாகும்
B – கணணி தட்டெழுத்து பலகையை உபயோகித்து எழுத்துருவாக்கங்களை இப்பலகையின் மூலம் செய்ய முடியும்
C - இதன் விலை ஏனைய ஊடகங்களைவிட ஒப்பீட்டளவில் அதிகமாகும்
இவற்றில் பிழையானது/பிழையானவை

i. B
ii. B,C
iii. A,B,C
iv. மேற்கூறிய எவையுமல்ல

11) இலங்கையின் செய்திப்பத்திரிகை வரலாற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது செய்திபத்திரிகை ஸ்தாபனம்

i. உபாலி செய்திப்பத்திரிகை ஸ்தாபனம்
ii. தவச செய்திப்பத்திரிகை ஸ்தாபனம்
iii. ஐக்கிய செய்திப்பத்திரிகை நிறுவனம்
iv. எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் நிறுவனம்

12) இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் முன்னோடி வகிபாகத்தை வகித்தவர் யார்

i. ஜோர்ஜ் ஈஸ்ட்மன்
ii. விளடிமீர் ஸ்வொரிகின்
iii. டெகியுரே
iv. ஷான் விக்கிரமசிங்க

13) வானொலியின் மட்டுப்பாடுகளில் உள்ளடங்காதது

i. வானொலி ஊடகம் ஒலியை மட்டும் அடிப்படையாக கொண்டது
ii. மறுஒலிபரப்பு சந்தர்ப்பம் காணப்படும்
iii. செவிமடுப்போரின் கவனம் திசை திரும்பும்
iv. ஆழமான கருத்துக்களை வானொலி ஊடாக பெற முடியும்

14) புகைப்படச்சுருள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன
A – புகைப்படச்சுருளானது பொதி செய்யப்பட்டிருப்பது ஒளி உட்புகாத பாதுகாப்பான சிறிய பிளாஸ்ரிக கொள்கலனிலாகும்
B – புகைப்பட சுருளை அதிக வெப்பம் சூழ்ந்த இடங்களில் வைத்து பாதுகாக்க வேண்டும்
C – கமராவில் உட்படுத்தப்பட்ட படச்சுருளை புகைப்படம் எடுத்த பின்பு இரசாயன செயற்பாட்டிற்கு உட்படுத்திய பின்னரே உண்மையான புகைப்படத்தை பெறறுக்கொள்ள முடிகின்றது
இவற்றுள் தவறானவை

i. A
ii. B
iii. A,B
iv. மேற்கூறிய எதுவுமல்ல

15) தொடர்பாடல் செயன்முறையில் உருவாகின்ற இடையூறுகளை இழிவளவாக பேணுவதற்கு பொருத்தமான வழியல்லாதது
i. வலுவான தொழிநுட்பக்கருவி பயன்பாடு
ii. இருவழித்தொடர்பு வழியை உருவாக்கல்
iii. குறித்த நேர அளவிற்கேற்ப பல்வேறு விடயங்களை வழங்கல்
iv. எழுத்து மூல தொடர்பு வடிவத்தை முதன்மைப்படுத்தல்

16) பஸ்நிலையம் ஒன்றில் பஸ்ஸிற்காக காத்திருக்கும் பயணிகள் குழு ஒன்றினிடையே நடைபெறக்கூடிய தொடர்பாடல்
i. ஆட்களிடைத்தொடர்பாடல்
ii. முறைசார் தொடர்பாடல்
iii. ஆளுள் அல்லது அகமுகித்தொடர்பாடல்
iv. முறைசாராத்தொடர்பாடல்

17) நிறுவனமொன்றின் வெவ்வேறு மட்டங்களின் பணிக்குழுவினரிடையே செயற்படுத்தப்படுகின்ற தொடர்பாடல்
i. வட்டமாதிரி
ii. மேலிருந்து கீழான தொடர்பாடல்
iii. கூட்டுத்தொடர்பாடல்
iv. குறுக்குத்தொடர்பாடல்

18) செய்திப்பத்திரிகை நிருபர் ஒருவரின் பண்புகள் வருமாறு
A – உண்மைத்தன்மையுடையவர்
B – துணிந்து செய்தி அறிக்கையிடுபவர்
C – செய்தி வேட்டையாடும் இயல்பு
D – செய்தி அறிக்கையிடலை பகுப்பாய்வுடன் மேற்கொள்பவர்
இவற்றில் சரியானவை
i. B
ii. C
iii. B,C
iv. A,B,C,D

19) இலங்கை செய்திப்பத்திரிகை வரலாற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தனியார் செய்திப்பத்திரிகை ஸ்தாபனம்
i. தவச ஸ்தாபனம்
ii. லேக்ஹவுஸ்
iii. ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
iv. மகாபோதி இயக்கம்

20) மின்னஞ்சலின் இயல்புகள் தொடர்பான கூற்றுக்கள்
A – தேவையற்ற கடிதங்களை அழித்துவிடமுடியும்
B – தாமதமானது
C – ஒப்பீட்டளவில் செலவு அதிகம்
D – நம்பிக்கைத் தன்மை குறைவு
இவற்றில் தவறானவை
i. B,C
ii. B,D
iii. B,C,D
iv. A,B,C,D

21) செய்திப்பத்திரிகை நிறுவனத்தில் செய்திப்பிரிவில் உள்ளூர் செய்திகள் அல்லது மாவட்டச்செய்திகள் தொடர்பாக பணியாற்றும் நிரந்தரப்பதவியுடைய நிருபர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்
i. பிரதேச நிருபர்கள்
ii. பதவிநிலை ஆசிரியர்கள்
iii. கூட்டுநிருபர்கள்
iv. பதில் ஆசிரியர்கள்

22) தரணீ ஒரு வானொலி அறிவிப்பாளர் அவரது தொழிலுடன் மிகத்தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்
i. முறைசார் தொடர்பாடல்
ii. வெகுசனத்தொடர்பாடல்
iii. செவிப்புலத்தொடர்பாடல்
iv. வாய்மொழித்தொடர்பாடல்

23) குறித்த நபர் பற்றிய தோற்றப்பாடுகள், தகைமை மாற்றங்கள், அறிவுமட்டம் ஆகியவற்றை சமூகத்தின் மத்தியில் கட்டியெழுப்பும் பிரதிநிதித்துவ கற்கை பின்வருவனவற்றுள் எது
i. இரசனை
ii. கட்டுருவாக்க சிந்தனை
iii. சமூகப்படிமம்
iv. சமூககட்டமைப்பு

24) இலங்கை வானொலி வரலாற்றில் வானொலி சேவைக்காக அரச கூட்டுத்தாபனம் 1949 இல் உருவாக்கப்பட்டது. இதில் முதல் இயக்குநர் பதவி வகித்தவர்

i. T.M. கொலம்பகே
ii. எட்வேட் ஹாபர்
iii. ஹியுகிளிபட்
iv. ஜோண்.ல.லொம்சன்

25) இலத்திரனியல் பத்திரிகையின் பொதுவான குணவியல்புகளில் உள்ளடங்காதது

i. காலம் கடந்தும் பாவனை செய்ய முடியாது
ii. செய்தியின் தாமதம்
iii. தாமதமான பாவனையாளர் கருத்தாடல் இடம்பெறல்
iv. தகவலுக்கேற்ற வகைப்படுத்தல்

26) பாடசாலை ஒன்றில் பரிசளிப்பு நிகழ்விற்காக புத்தகம் ஒன்றினை வெளியீடு செய்வதற்காக பாடசாலை நிர்வாகம் தீர்மானித்திருந்தது. அப்புத்தகத்தின் முற்பக்க அட்டையில் பாடசாலையின் முழுத்தோற்றத்தையும் அச்சிடுவதென முடிவு செய்தனர். இதற்காக பயன்படுத்தக்கூடிய பொருத்தமான சட்டகம்

i. மிக நீண்டதூரப்படம்
ii. நடுத்தரப்படம்
iii. மிக நெருக்கமான படம்
iv. நீண்டதூரப்படம்

27) பிரதம ஆசிரியர் தொடர்பான கூற்றுக்கள் வருமாறு

A – ஆசிரியர் தலையங்கம் எழுதுதல்
B – பத்திரிகையில் பிரதான செய்தியை தேர்வு செய்தல்
C – உபஆசிரியர் பிரதி ஆசிரியர்களிற்கு வேலைகளை பகிர்ந்தளித்தல்
D – பத்திரிகை வெளியீட்டிற்கு முழுப்பொறுப்பு கூறல்

இவற்றில் சரியானவை

i. A
ii. A,B
iii. A,B,D
iv. A,B,C,D

28) “தொலைநகல்” தொடர்பான கூற்றுக்களில் பொருத்தமானது

i. அச்சிடப்பட்ட விடயமானது விரைவாக அழிந்துவிடும்
ii. வெளிநாடுகளிற்கு தொலைநகல் செய்தி அனுப்பும் போது அந்நாடுகளின் நேரத்தினை அறிவது அவசியமில்லை
iii. தொலைநகலில் செய்தியை கடத்த நீண்ட நேரம் செலவாகும்
iv. தொலைநகல் செய்தியை அனுப்பும் போது வர்ண நிற எழுத்துக்களை பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது

29) வானொலி ஊடகத்தின் பண்பு அல்லாதது

i. வானொலி தகவல் வெளிப்பாட்டை புரிந்து கொள்ள கல்வியறிவு அவசியம்
ii. தொடர்பாடல் ஒருவழிப்பாதையானது
iii. நேரலையில் தொடர்பாட முடிவது
iv. உடனடியாக தகவல்களை சொல்லவல்லது

30) வானொலி நிகழ்ச்சித்தயாரிப்பாளரின் செயற்பாடுகள் வருமாறு

A – நிகழ்ச்சியைத்திட்டமிடல்
B – நிகழ்ச்சிப்பிரதியை தாமே தயாரித்தல் அல்லது தயாரிக்கப்பணித்தல்
C – பிரதியை செம்மையாக்கல்
D – செய்யப்பட்ட பணிகளை திட்டமிடல்
E – நிகழ்ச்சியை அளிக்கை செய்தல்

இவற்றில் தவறான செயற்பாடுகள்

i. C
ii E,D
iii. C,E
iv. மேற்கூறிய எதுவுமில்லை

31) புகைப்படத்துறையில் எண்மான (digital) புகைப்படகமராவின் தொழிற்பாட்டில் உள்ளடங்காதது

i. கையாள்வது இலகுவானது
ii. செம்மையாக்கல் மேற்கொள்வது சுலபம்
iii. ஒரே வடிவங்களுக்கு கொண்டு செல்லக் கூடியது
iv. அதிக எண்ணிக்கையான புகைப்படங்களை சேமிக்க முடியும்

32) தகவல்களைத்திரட்டும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களில் உள்ளடங்காதது
i. உரிய தகவல்களை மட்டும் விசாரிக்க வேண்டும்
ii. தனது கருத்தினை உறுதிப்படுத்த தகவல்களைத்திரட்டுதல்
iii. பெறப்படும் தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும்
iv. அநாவசிய தூண்டல்களிற்கு புறம்பாக தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டும்

33) செய்திகள் தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதில் ஏனைய ஊடகங்களில் இல்லாத சிறப்பு தொலைக்காட்சியில் காணப்படுகின்றது இதற்கு காரணமாக அமையாதது
i. ஒரு திடீர் ஊடகம்
ii. நேரடி வலுவுள்ள ஊடகம்
iii. அன்புடன் நட்பாக பழக இயலுமான ஊடகம்
iv. வேறொரு வேலையின் போதும் இரசிக்க கூடிய ஊடகம்

34) வில்லையானது ஒரு பொருளை நோக்கி குவிப்பு செய்தவுடன் அப்பொருளில் இருந்து முன்பக்கமும் பின்பக்கமும் தெளிவாக தெரியக்கூடிய தூரத்தின் அளவானது காட்சித்தள ஆழம் எனப்படும். இக்காட்சித்தள வேறுபாட்டைப பாதிக்கும் காரணிகளுள் தவறானவை
i. வில்லைத்தூரம் அதிகரிக்கும் போது தள ஆழம் குறையும்
ii. வில்லையின் குவியத்தூரம் அதிகரிக்கும் போது காற்றுத்தள ஆழம் குறையும்
iii. கமராவில் பொருளுக்குள்ள தூரம் குறைவடையும் போது காட்சித்தள ஆழம் குறையும்
iv. கமராவின் பொருளுக்குள்ள தூரம் அதிகரிக்கும் போது காட்சித்தள ஆழம் குறையும்

35) ஊடக நிறுவனங்களின் பிரதான வருமானமாக தங்கியிருப்பது
i. செய்திகள்
ii. விளம்பரங்கள்
iii. பாடல்கள்
iv. நாடகங்கள்

36) சிறுவர்களிற்கான தொலைக்காட்சி நாடகமொன்றைப்பார்த்துக் கொண்டிருந்த சோபியா அந்த நாடகத்தில் நடித்த சிறுவனும் தனது சகோதரனும் ஒரே முகச்சாயலை கொண்டிருந்ததாக உணர்ந்தாள். இவ்வாறு உணர்வதற்கு காரணமான தொடர்பாடல் வகை
i. வெகுசனத்தொடர்பாடல்
ii. ஆளுள் அல்லது அகமுகித்தொடர்பாடல்
iii. காட்சித்தொடர்பாடல்
iv. ஆட்களிடைத்தொடர்பாடல்

37) இலத்திரனியல் ஊடகங்களிற்கென சில ஒழுக்க நெறிகள் காணப்படுகின்றது அவற்றுள் பொருத்தமானது
i. வணிகமயமாதல் அதிகரிக்கப்பட வேண்டும்
ii. அந்தரங்கம் அதிகரிக்கப்பட வேண்டும்
iii. களங்கப்பேச்சு காணப்பட வேண்டும்
iv. சுயதணிக்கை காணப்பட கூடாது

38) முரசறைதல், குக்குரலிடல், பூஜைகள், ஓலமிடுதல் போன்றவை மானிடத்தொடர்பாடல் அம்சங்களாகும் அவை தொடர்புபடுவது
i. பேச்சற்ற தொடர்பாடல்
ii. படைப்புத்தொடர்பாடல்
iii. அபிவிருத்தி தொடர்பாடல்
iv. பாரம்பரியத்தொடர்பாடல்

39) திறமையான ஊடகவியலாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டியது
A – தற்கால நிகழ்வுகள் குறித்த சிறந்த புரிந்துணர்வு
B – விடயத்தை பகுத்தாராயும் ஆற்றல்
C – துல்லியமான செய்தி வழங்கலில் ஆர்வம்
மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை
i. A
ii. A,B
iii. A,C
iv. A,B,C

40) நீங்கள் பெறும் தொலைபேசி அழைப்பு எந்த தொலைபேசி எண்ணிலிருந்து மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிய உங்கள் தொலைபேசியில் அவசியம் இருக்க வேண்டிய வசதி எது
i. IDD
ii. CLI
iii. CDMA
iv. GPRS

★★★★★

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) இரண்டாம் தவணைப்பரீட்சை 2017 யூலை**
**General Certificate of Education (Ord. Level)Second Term Examination, 2017July**

| | | |
|---|---|---|
| **தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II**<br>**Communication and MediaStudies I,II** | **87 \| T \| I,II** | **மூன்று மணித்தியாலம்**<br>**Three Hours** |

**அறிவுறுத்தல்:**

1. **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
2. **முதலாம்** வினாவிற்கு ***20*** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் ***10*** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

## பகுதி II

*1)* “ நிலா தனது பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் குறித்த ஒரு தலைப்பு பற்றி பேச்சினை நிகழ்த்த முடிவு செய்துள்ளார். அதற்காக பேச்சின் போது நடந்து கொள்ளும் முறைகள் பேச்சுப்பாணி என்பவற்றை தொலைக்காட்சி மூலமும் தன் தலைப்புக்கு பொருத்தமான தேவையான தகவல்களை நவீன ஊடகங்கள் மூலம் பெறுகை செய்து கொண்டார்.”

*1)* நிலா பேச்சு செயற்பாட்டை முன்வைக்கும் போது பயன்படுத்த வேண்டிய நுட்ப முறைகள் *04* தருக.

*2)* தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியின் வகைகள் *04* தருக.

*3)* நவீன ஊடகமான இணையத்தின் உபயோக நன்மைகள் *02* தருக.

*4)* நிலா பேச்சு செயற்பாட்டை முன்னெடுக்கும் போது நடைபெறும் தொடர்பாடல் வகை எது? அதன் சிறப்பியல்புகள் *02* தருக.

*5)* நிலா சிறுவயதிலிருந்தே சபைக்கூச்ச சுபாவம் உடைய பெண் இதனால் பேச்சினை நிகழ்த்த சிறிது பயம் உடையவர். இது இவரின் பலவீனமாகும். இவ்வாறான பேச்சாளரின் பலவீனம் *04* தருக.

*6)* நிலா தனது பேச்சினை மேற்கொள்கையில் பல இடையூறுகளை சந்திக்க நேரிடலாம். அவ்வாறான இடையூறுகளின் பிரதான வகைகள் இரண்டும் அவற்றுக்கான உதாரணமும் குறிப்பிடுக.

*7)* தொடர்பாடல் செயன்முறையின் இடையூறு தொடர்பான மாதிரியை முன்வைத்தவர் யார்? அவரின் மாதிரியின் முக்கிய பண்புகள் *02* தருக.

*8)* நிலா தனது பேச்சின் தலைப்பிற்கு பொருத்தமாக விபரங்களை திரட்ட பல்வேறு தகவல் மூலாதாரங்களை பயன்படுத்தி இருக்கலாம். அத்தகைய தகவல் மூலாதாரங்களின் வகைகள் எவை?

*9)* தகவல்களை சேகரிக்க ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் எவை?

*10)* உலக தொலைக்காட்சி தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

2) "தொடர்பாடல் செயல் ஒழுங்கிற்காக பல்வேறு விதங்கள், வடிவங்கள், முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1) தொடர்பாடல் எக்காரணியை மையப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன.
2) தொடர்பாடலின் வடிவங்கள் 04 தருக.
3) தொடர்பாடலின் வகைகளினை குறிப்பிட்டு விபரிக்குக.
4) நிறுவனம் ஒன்றில் முறைசார் தொடர்பாடல் இடம்பெறும் 03 வழிமுறைகளையும் உதாரணங்களுடன் குறிப்பிடுக.

3)

1) "வானொலியை கற்பனை/ படைப்பாக்க ஊடகம் என கருத முடியும்" மேற்படி கூற்றுடன் இணங்குகின்றீர்களா? அதற்கான காரணத்தினை சுருக்கமாக விளக்குக.
2) தொலைக்காட்சி ஊடகங்களில் கிரகிப்போர் ஊடாக விளங்கறிவை பயன்படுத்துவது சிறந்தது" இக்கூற்றுடன் இணங்குகின்றீர்களா? அதற்கான காரணத்தினை சுருக்கமாக விளக்குக.
3) "தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் வர்த்தக விளம்பரங்களினால் ஏற்படுத்தும் தாக்கங்களை இழிவளவாக்க முடியாது" இக்கூற்றுடன் இணங்குகின்றீர்களா? அதற்கான காரணத்தினை சுருக்கமாக விளக்குக.
4) "அச்சுக்கலை விருத்தி ஆரம்பத்தில் ஏற்பட்ட குறைபாடுகளினாலேயே ஏற்பட்டது. இகக்கூற்றுடன் இணங்குகின்றீர்களா? அதற்கான காரணத்தினை சுருக்கமாக விளக்குக.

4) " தொடர்பாடலை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு ஊடக உபகரணங்கள் பெரிதும் துணை புரிகின்றன"

1) தகவல் பரிமாற்ற ஊடக உபகரணங்கள் 04 தருக.
2) பாடசாலை ஒன்றில் காந்தப்பலகையை பயன்படுத்தும் சந்தர்ப்பம் 02 தருக.
3) வானொலி ஊடக நிறுவனம் ஒன்றின் பிரிவுகள் 04 தருக.
4) இருவழித்தொடர்பாடல் மாதிரியின் முக்கியம் பற்றி வரிப்படம் மூலம் விளக்குக.

5) "பல்வேறு தேவைகளிற்காக வேறுபட்ட வகைகளிலான ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன."

1) வெகுஜன ஊடகங்களை வகைப்படுத்துக.
2) பத்திரிகை இயல்புகளின் அடிப்படையில் வகைபடுத்தப்படும் போது அளவு ரீதியாக எவ்வாறு வகைப்படுத்த முடியும்? அவற்றிற்கு உதாரணம் 02 தருக.
3) இலத்திரனியல் பத்திரிகையின் வளர்ச்சிக்கான காரணிகள் 03 தருக.
4) பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுவதற்கான நோக்கங்கள் 04 தருக.

The National e-learning Portal for The General Education

6) ‘‘கமராக்களிலிருந்து புகைப்படங்களை பெறுவது படைப்பாக்கம் மிக்க செயலாகும்’’

1) வில்லைகளின் வகைகள் 04 குறிப்பிடுக
2) நிலைத்த புகைப்பட கலையால் அச்சூடகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் 03 குறிப்பிடுக
3) கமரா ஒன்றில் கட்டாயமாக காணப்பட வேண்டிய 03 பகுதிகளையும் புகைப்படப்பிடித்தலின் போது கையாள வேண்டிய 03 முக்கிய வியங்களையும் குறிப்பிடுக
4) டிஜிட்டல் (digital) புகைப்படத்தின் சிறப்பம்சங்கள் 04 தருக.

7) ‘‘இலத்திரனியல் ஊடகங்களில் வானொலி தொலைக்காட்சி ஆகியன உள்ளடங்குகின்றன.’’

1) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச வானொலி சேவைகள் 04 தருக.
2) வானொலி ஊடகப்பிரிவு எழுதுபவர் தனது திறமையை வெளிக்காட்டும் விடயங்கள் 04 தருக.
3) தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகள் 04 தருக
4) தொடர்பாடல் வரைவிலக்கணத்தில் ஹரோல் .டி.லாஸ்வெல் மாதிரியினை குறிப்பிட்டு விளக்குக.

★★★★★

The National e-learning Portal for The General Education